Registered as a Newspaper    பக்கங்கள் 4    விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM    மக்கள் தினசரி    Peoples Daily

## யாழ். மருத்துவமனை ஊழியரை சீருடையில் கடமை புரிய பணிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா மருத்துவமனையில் பணிபுரியும் சகல சிற்றூழியர்களும் சீருடை அணிந்தே பணிபுரிய வேண்டும். தவறின் தண்டனை வழங்கப்படுமென பணிப்பாளர் அறிவித்துள்ளார். இதுபற்றி சிற்றூழியர்களுக்கான அறிவித்தல் பலகையில்பணிப்பாளரால் விடுக்கப்பட்ட அறிவுறுத்தல் குறிப்பு ஒட்டப்பட்டுள்ளது. அக்குறிப்பில் 22-12-93 தொடக்கம் சகல சிற்றூழியர்களும் சீருடைஅணிந்தே கடமையில் ஈடுபட வேண்டும் என்றும் தவறின் தண்டனை வழங்கப்படுமெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது:

நாதம் 04    திருவள்ளுவர் ஆண்டு 2024    மார்கழி 13    ( 28 12 93 )    செவ்வாய்க்கிழமை    ஓசை 313

# அலம்பிலில் விமான தாக்குதல் சிறுவர்கள் உட்பட மூவர் பலி

## கூட்டுறவுச்சங்கம்; வீடுகள் சேதம்

(மணலாறு)

**மணலாறு மாவட்டம் அலம்பில் கிராமம்மீது சிறிலங்கா விமானப்படை விமானங்கள் நேற்று நடாத்திய குண்டுவீச்சு தாக்குதலில் ஒரேகுடும்பத்தைச்சேர்ந்த இரு சிறுவர்கள் உட்பட மூவர் பலியாகினர். அப்பகுதி பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் முற்றாகச் சேதமடைந்தது.**

காலை 8. 40 மணியளவில் இரு பொம்பர்களும் புக்காரா குண்டுவீச்சு விமானம் ஒன்றும் ஐந்துக்கும்மேற்பட்ட குண்டுகளை வீசி தாக்குதலை நடாத்தின. இத்தாக்குதலின் போது அலம்பிலைச் சேர்ந்த சியாமணிகோமளா (வயது 04), சியாமணிதீபன் (வயது 12 ), மடுக்கோவில் மன்னாரைச் சேர்ந்த பிரியா ( வயது 18 ) ஆகியோர் பலியாகினர்.

அப்பகுதியில் உள்ள ஐந்து வீடுகளும் சேதமடைந்தன.

இதேவேளை விமானப் படையினரின் தாக்குதல் நேற்று மணலாறு பகுதியில் தொடர்ந்து நடத்தப்பட்டதாக சிறிலங்கா வானொலி தெரிவித்தது. இதனால் பல முகாம்கள் அழிக்கப்பட்டதாகவும் சிறிலங்காபாதுகாப்பு வட்டாரங்கள் கூறியதாக அவ்வானொலி மேலும் தெரிவித்தது.

## 84 பயணிகளுடன் மார்க்கோ புறப்பட்டது

(வடமராட்சி)

பருத்தித்துறை இறங்குதுறையில் எண்ணெய் பரல்களை இறக்கி முடித்த 'மார்க்கோ' கப்பல் நேற்று மாலை கொழும்பு நோக்கிப் புறப்பட்டது.

இக்கப்பலில் யாழ். பிரதம தபாலக உத்தியோகத்தர்கள் 68 தபால் பொதிகளை அனுப்பி வைத்தனர். யாழ். மாவட்டத்தில் நடந்துமுடிந்த க. பொ. த. சாதாரணதரப் பரீட்சை விடைத்தாள்களும் அனுப்பி வைக்கப்பட்டன. கப்பலில் 84 பயணிகளும் சென்றனர்.

வயோதிபர்கள், சிறுவர்கள், நோயாளிகள், பெண்கள் ஆகியோரை கப்பலில்ஏற்றிச்செல்ல கப்பல் கப்டன் மறுத்திருந்தார். கப்பலில் இவர்களை ஏற்றக்கூடிய வசதிகள் இல்லாததனால் மேற்குறித்தோரை ஏற்ற மறுத்த போதிலும் யாழ். திட்டப் பணிப்பாளர் திரு. எஸ் பத்மநாதன் கப்டனுடன் தொடர்புகொண்டு எடுத்த முயற்சியையடுத்து பயணிகள் அனைவரும் கப்பலில் ஏற்றிச் செல்லப்பட்டனர். (யோ)

## 23 வங்கி வெற்றிடங்களுக்கு 6000பேர் விண்ணப்பம்

(கொழும்புத்துறை)

யாழ் மாவட்ட மக்கள் வங்கிக் கிளைகளில் உள்ள 23வெற்றிடங்களுக்கு ஆறாயிரத்திற்கு மேற்பட்டவர்கள் விண்ணப்பித்துள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ் மாவட்டத்தில் உள்ள மக்கள் வங்கிக் கிளைகளில் உள்ள எழுதுவினைஞர் தட்டெழுத்தாளர் பதவிகளுக்காக பரீட்சை திணைக்களத்தால் நடாத்தப்படவுள்ள போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பமுடிவு திகதி ஏற்கனவே முடிவடைந்தது குறிப்பிடத்தக்கது.

அதேவேளை மேற்படி போட்டிப் பரீட்சையில் தமிழ் மொழித் தேர்ச்சியும் பிறவும் நுண் அறிவு - எண் தேர்ச்சியும், பொது அறிவும் பாடங்களாக இருக்கும் என யாழ். அரச அதிபரும், மாவட்ட ஆணையாளருமான திரு கா. மாணிக்கவாசகர் தெரிவித்துள்ளார்.

இப்போட்டிப் பரீட்சையில் தோற்றுவதற்காக விண்ணப்பமுடிவு திகதிவரை ஆறாயிரம்பேர் வரை விண்ணப்பித்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (24)

## வடபகுதி மக்களுக்கு ஐரோப்பிய சமூகம் உதவி

(பிரசல்ஸ்)

வடபகுதி மக்களுக்கு மனிதாபிமான உதவியாக ஐரோப்பிய சமூகம் 8. 6 மில்லியன் ரூபாவை உதவித் தொகையாக வழங்கியுள்ளது இதற் பகுதி மக்களுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த உதவித் தொகையை முன்னாள் சோவியத் குடியரசுகள், கம்போடியா, மொங்கோலியா, செர்னோபில் அணுக்கதிர்

## அசாத்தியத்துணிவு; திட்டமிடலே புலிகளின் வெற்றிக்கு காரணம்!

(கொழும்பு)

யுத்த முக்கியத்துவம் வாய்ந்த ஒரு தளத்தை தாக்கி அழித்துள்ள புலிகளின்செயல் அவர்களது அசாத்தியமான துணிச்சலுக்கும் மிக கவன கின்றன. இவ்வாறு பூநகரி முகாம் அழிப்பு தொடர்பான தனது கட்டுரை ஒன்றில் இந்தியா டுடேயின் கொழும்புச் செய்தியாளர் பி ஜெயராம் தெரிவித்துள்ளார்.

எல்லாம் கட்டுப்பாட்டிற்குள் உள்ளது என இராணுவம் கூறும் கட்டுககதையை மக்கள் நம்பப்போவதில்லை என்று கூறுகிறார் முன்னாள் விமானப்படைத் தளபதி

## கிழக்குஉள்ளூராட்சிதேர்தல்; சுதந்திரக்கட்சி போட்டியிடும்

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்திலும், வவுனியா நகரிலும் நடைபெற விருக்கும் தேர்தல்களில் சுதந்திரக் கட்சி தனது வேட்பாளர்களை நிறுத்தும் என்று அக்கட்சியின் பொதுச் செயலாளர் டி.எம். ஜயரத்ன கூறியுள்ளார்.

சுதந்திரக்கட்சி அதன் தோழமைக் கட்சிகளின் கூட்டணியான பொதுமக்கள் முன்னணியின் அனுசரனையுடன் இத் தேர்தல்களில் போட்டியிடும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை கிழக்குமாகாணத்தில் காணப்படும் நிலைமை தேர்தல் நடாத்துவதற்கு ஏற்றதாக இல்லை என்று சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கூறியுள்ளது

## அரசாங்க பாடசாலைகளில் மாணவர்தொகைஅதிகரிப்பு

(கொழும்பு)

அரசாங்கபாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களின் எண்ணிக்கை இவ்ஆண்டில் 41 இலட்சத்து 84 ஆயிரத்து 543 ஆக அதிகரித்துள்ளதாக கல்வி உயர்கல்வி கலாசார அலுவல்கள் அமைச்சின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இது 1991 ஆம் ஆண்டில் 41 இலட்சத்து 25 ஆயிரத்து 114 ஆகவும் 1992இல் 41 இலட்சத்து 67 ஆயிரத்து 532ஆகவும் இருந்த தொகை 1991ஆம் ஆண்டில் ஒரு லட்சத்து 70 ஆயிரத்து 735 ஆகவும் கடந்த வருடம் ஒருலடசத்து 76 ஆயிரத்து 079 ஆகவும் இருந்தது எனவும் அவ் அறிக்கை கூறுகிறது.

இலங்கை முழுவதும் 1991 ஆண்டில் 9998பாடசாலை இது 1992இல் 10,024ஆகவும் இவ் வருடத்தில்10,071 ஆகவும் அதிகரித்துள்ளதாக அவ் அறிக்கை தெரிவிக்கிறது.

வாந்திபேதியால்

அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ் மாவட்டத்தில் உள்ள மக்கள் வங்கிக் கிளைகளில் உள்ள எழுதுவினைஞர் தட்டெழுத்தாளர் பதவிகளுக்காக பரீட்சை திணைக்களத்தால் நடாத்தப்படவுள்ள போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பமுடிவு திகதி ஏற்கனவே முடிவடைந்தது குறிப்பிடத்தக்கது.

அரச அதிபரும், மாவட்ட ஆணையாளருமான திரு கா. மாணிக்கவாசகர் தெரிவித்துள்ளார்.

இப்போட்டிப் பரீட்சையில் தோற்றுவதற்காக விண்ணப்பமுடிவு திகதிவரை ஆறாயிரம்பேர் வரை விண்ணப்பித்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (24)

இரு பொம்பர்களும் புக்காரா குண்டுவீச்சு விமானம் ஒன்றும் ஐந்துக்கும்மேற்பட்ட குண்டுகளை வீசி தாக்குதலை நடாத்தின. இத்தாக்குதலின் போது அலம்பிலைச் சேர்ந்த சியாமணிகோமளா (வயது 04), சியாமணிதீபன் மன்னாரைச் சேர்ந்த பிரியா (வயது 18) ஆகியோர் பலியாகினர்.

அப்பகுதியில் உள்ள ஐந்து வீடுகளும் சேதமடைந்தன.

இதேவேளை விமானப் படையினரின் தாக்குதல் நேற்று மணலாறு பகுதியில் தாக சிறிலங்கா வானொலி தெரிவித்தது. இதனால் பல முகாம்கள் அழிக்கப்பட்டதாகவும் சிறிலங்காபாதுகாப்பு வட்டாரங்கள் கூறியதாக அவ்வானொலி மேலும் தெரிவித்தது.

னர் கூறியுள்ளார்.

சுதந்திரக்கட்சி அதன் தோழமைக் கட்சிகளின் கூட் ... நு ஏற்றதாக இல்லை என்று சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கூறியுள்ளது

## வடபகுதி மக்களுக்கு ஐரோப்பிய சமூகம் உதவி

(பிரசல்ஸ்)

வடபகுதி மக்களுக்கு மனிதாபிமான உதவியாக ஐரோப்பிய சமூகம் 8. 6 மில்லியன் ரூபாவை உதவித் தொகையாக வழங்கியுள்ளது இதற்கான அங்கீகாரம் ஐரோப்பிய சமூகத்தினால் கடந்த வாரம் வழங்கப்பட்டது.

ஐரோப்பிய சமூகத்தின் மனிதாபிமான உதவித்தொகையின் ஒரு பகுதியே வடபகுதி மக்களுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது இந்த உதவித் தொகையை முன்னாள் சோவியத் குடியரசுகள், கம்போடியா, மொங்கோலியா, செர்னோபில் அணுக்கதிர் வீச்சு பேரழிவால் பாதிக்கப்பட்டவர்கள், பாகிஸ்தானில் உள்ள ஆப்கான் அகதிகள் போன்றோரும் பெறுகின்றனர்.

## அசாத்தியத்துணிவு; திட்டமிடலே புலிகளின் வெற்றிக்கு காரணம்!

(கொழும்பு)

யுத்த முக்கியத்துவம் வாய்ந்த ஒரு தளத்தை தாக்கி அழித்துள்ள புலிகளின்செயல் அவர்களது அசாத்தியமான துணிச்சலுக்கும் மிக கவனமான திட்டமிடும் திறனுக்கும் சான்றாக உள்ளது. இந்த திறமைகள்தான் புலிகள் அமைப்பை உலகிலேயே மிக வெற்றிகரமான செரில்லாப் படையாக ஆக்கியிருக்கின்றன. இவ்வாறு பூநகரி முகாம் அழிப்பு தொடர்பான தனது கட்டுரை ஒன்றில் இந்தியா டுடேயின் கொழும்புச் செய்தியாளர் பி ஜெயராம் தெரிவித்துள்ளார்.

சுட்டுவிட்டு ஓடும் சாதாரண தாக்குதல் இல்லை இது. இரு அணிகளின் மத்தியில் ஏற்படும் யுத்தம் போன்றது என வடக்கில் போர் அனுபவம் உள்ள ஒரு இராணுவ அதிகாரி குறிப்பிட்டதாகவும் இந்தியா டுடேயில் மேலும் தெரிவிக்கப்படுகிறது. பூநகரியில் இருந்த கடற்படைப் பிரிவு நிர்மூலமாக்கப்பட்டுவிட்ட நிலையில் பூநகரி தளத்தையே இனி கைவிடவேண்டி வரலாம் என இராணுவ ஆய்வாளர்கள் கருதுகின்றனர். ஏனெனில் கடற்படை பிரிவு இல்லாமல் யாழ்ப்பாணப் பகுதியை பாதுகாப்பதோ புலிகளை தடுத்து நிறுத்துவதோ சாத்தியமில்லை.

எல்லாம் கட்டுப்பாட்டிற்குள் உள்ளது என இராணுவம் கூறும் கட்டுககதையை மக்கள் நம்பப்போவதில்லை என்று கூறுகிறார் முன்னாள் விமானப்படைத் தளபதி ஹரி குணதிலக்கா. தற்போதைய அரசு தமிழர் போராட்டத்தை கடுமையான கண்ணோட்டத்துடன் அணுகுவதன் விளைவே பூநகரி தாக்கு

(3 ஆம் பக்கம் பார்க்க)

## அரசாங்க பாடசாலைகளில் மாணவர்தொகைஅதிகரிப்பு

(கொழும்பு)

அரசாங்கபாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களின் எண்ணிக்கை இவ்ஆண்டில் 41 இலட்சத்து 84 ஆயிரத்து 543 ஆக அதிகரித்துள்ளதாக கல்வி உயர்கல்வி கலாசார அலுவல்கள் அமைச்சின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இது 1991 ஆம் ஆண்டில் 41 இலட்சத்து 25 ஆயிரத்து 114 ஆகவும் 1992இல் 41 இலட்சத்து 67 ஆயிரத்து 532ஆகவும் இருந்தது.

மேலும் அரசாங்க பாடசாலைகளில் இவ்வருடம் ஒருலட்சத்து 85ஆயிரத்து 804 ஆசிரியர்கள் சேவை செய்துள்ளனர் எனவும் இத்தொகை 1991ஆம் ஆண்டில் ஒருலட்சத்து 70 ஆயிரத்து 735 ஆகவும் கடந்த வருடம் ஒருலடசத்து 76 ஆயிரத்து 079 ஆகவும் இருந்தது எனவும் அவ்அறிக்கை கூறுகிறது.

இலங்கை முழுவதும் 1991 ஆண்டில் 9998பாடசாலை இது 1992இல்10,024ஆகவும் இவ் வருடத்தில்10,071 ஆகவும் அதிகரித்துள்ளதாக அவ் அறிக்கை தெரிவிக்கிறது.

## வாந்திபேதியால் இருவர் மரணம்

பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தவாந்திபேதி

( 3 ஆம் பக்கம் பார்க்க )

## ஹெலஉறுமயவின் பிரசாரத்திற்கு ஜனாதிபதி அடிபணிந்துவிட்டார்

### இந்துப் பத்திரிகைக்கு தொண்டா பேட்டி

(கொழும்பு)

ஜனாதிபதி விஜேதுங்க ஹெலஉறுமய பிரசாரத்துக்கு அடிபணிந்து போய்விட்டார். ஹெலஉறுமய பிரசாரம் இப்போது தீவிரமாகி இருக்கிறது இவ்வாறு அமைச்சர் தொண்டமான் அண்மையில் சென்னை இந்துப் பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

அப்பேட்டியின்போது அவர் மேலும் தெரிவிக்கையில் ஜனாதிபதி விஜேதுங்க எனது மாணவ சகா. அடிப்படையில் சிநேகபூர்வமான மனிதர். ஐ.தே.க. விரும்பினால் இ.தொ. காவுடனான கூட்டணியைக் காப்பாற்றமுடியும். அதற்கு ஐ தே. கவின் மன நிலையில் மாற்றம் தேவை.

தமிழர்கள் எப்போதுமே பயந்துகொண்டுதான் இருக்கிறார்கள். நான் அரசாங்கத்தில் இருக்கின்றபோதும் கூட அண்மைக் காலத்தில் ஐம்பது ஆயிரத்துக்கும் அதிகமான தமிழர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். என்னால் எதுவும் செய்துவிட முடியவில்லை. இத்தகைய நிகழ்வுகளைத் தடுக்க முடியாவிட்டால் இத்தகைய பதவிகளில் இருப்பதில் அர்த்தமில்லை என்று மற்றுமொரு கேள்விக்கு பதிலளிக்கையில் தெரிவித்தார்.

## தென்மாகாணசபை விவகாரம் வாக்கெடுப்பா? கலைப்பா?

### மாகாண ஆளுநர் முதல்வரிடம் கேள்வி

(கொழும்பு)

தென் மாகாணசபையின் அடுத்த ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தை டிசெம்பர் 31-ம் திகதிக்கு முன் சமர்ப்பித்து வாக்கெடுப்பு நடத்த முடியுமா? அல்லது மாகாணசபையை கலைக்க தயாரா? என தென்மாகாண சபை ஆளுநர் தென்மாகாண சபை முதல்வரைக் கேட்டுள்ளார். இவ் வரவு-செலவுத் திட்டம் மீதானவாக்கெடுப்பு கடந்த 23-ம் திகதி நடைபெறவிருந்து பின்னர் ஒத்தி வைக்கப்பட்டமைதெரிந்ததே

இதற்குப் பதிலளித்த தென் மாகாண சபையின் முதல் அமைச்சர் அமரசிறி தொடங்கொட குறிப்பிட்ட காலப் பகுதிக்குள் வாக்கெடுப்பு நடத்தி வரவு-செலவுத் திட்டத்தை நிறைவேற்ற முடியும் என தெரிவித்துள்ளார்.

முதல் அமைச்சர் மாகாண சபைஅலுவலகத்திற்குஅழைக்கப்பட்டு இது குறித்து விசாரிக்கப்பட்டதாகவும் இன்றைய நிலையில் தொடர்ந்தும் தென்மாகாணசபை இய

(3 ஆம் பக்கம் பார்க்க)

## பூநகரி தாக்குதல் தொடர்பான விசாரணைக்குழுமீது சந்தேகம்

(கொழும்பு)

பூநகரி இராணுவ முகாம் மீதான தாக்குதல் குறித்து விசாரணை நடத்தவென நியமிக்கப்பட்ட குழுவினரின் செயற்பாடுகள் குறித்து இராணுவ வட்டாரங்களில் பலத்த சந்தேகம் எழுந்துள்ளது.

இவ் இராணுவ விசாரணைக் குழுவானது பக்கசார்பற்ற முறையில் விசாரணையை மேற்கொள்ளுமா? அல்லது அரசியல் அழுத்தங்கள் இவ் விசாரணைக் குழு மீது பிரயோகிக்கப்படுமா? என்பது குறித்து இராணுவ உயர்வட்டாரங்கள் கேள்வி எழுப்புகின்றன.

மேலும் இக் குழுவினர் முகாம் மீதான தாக்குதலின் போது காணாமல் போன படையினர் தொடர்பாக ஆராய்வார்களா? என்பது குறித்தும் அவ்வட்டாரங்கள் கேள்வி எழுப்புகின்றன.

இத் தாக்குதல் தோல்வியினால் இராணுவத்தளபதிக்கும் அரசுக்கு மிடையேமுரண்பாடுதோன்றியுள்ளமையும், இக்குழுவை இராணுவத்தளபதி நியமித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

நவசமசமாஜக்கட்சியின்

## ஜனாதிபதி வேட்பாளராக விக்கிரமபாகு கருணரட்னா

(கொழும்பு)

1994 இல் நடைபெறவிருக்கும் ஜனாதிபதி தேர்தலில்நவசமசமாஜக் கட்சியின் வேட்பாளராக கலாநிதி விக்கிரமபாகு கருணரட்னா போட்டியிட இருப்பதாக நவசமசமா

(3 ஆம் பக்கம் பார்க்க)

## எரிகாயங்களுடன் பெண் அனுமதி

(யாழ்ப்பாணம்)

எரிகாயங்களுக்கு உள்ளாகி கைதடி மருத்துவமனைக்கு கொண்டுசெல்லப்பட்ட அருந்ததி (வயது 43) என்பவர் அவசர சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவ மனைக்கு மாற்றப்பட்டுள்ளார். இவர் மிக மோசமான தீக்காயங்களுக்கு உள்ளாகியுள்ளார். (சி)

## ஜனாதிபதி மாளிகையின் பாதுகாப்பிற்கு அதிகநிதி

(கொழும்பு)

சிறிலங்கா ஜனாதிபதியின் வாசஸ்தலமான ஜனாதிபதி மாளிகையை பாதுகாக்க 100லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இத்தொகைப் பணம் 1994ஆம் ஆண்டிற்கென ஒதுக்கப்பட்டுள்ளது. கடந்த மூன்று ஆண்டுகளுக்கு மொத்தம்183லட்சம்ஒதுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதே வேளை 1994ஆம் ஆண்டுக்கு ஜனாதிபதி மாளிகையின் உபயோகத்தில் இருக்கும் வாகனங்களுக்காக 33லட்சம், ரூபா ஒதுக்கப்படவுள்ளது. 1992இல் 21லட்சம் ரூபாவும் 1993இல் 26லட்சம் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## படையினரின் கெடுபிடி குறித்து வன்னி. செஞ்சிலுவை விசனம்

(கிளிநொச்சி)

இலங்கை செஞ்சிலுவைச் சங்க ஊழியர்கள் மீதும் அதிகாரிகள் மீதும் படையினர் மேற்கொள்ளும் கெடுபிடிகளையடுத்து வன்னிப் பகுதியில் இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் தனது சேவைகளை நிறுத்தப்போவதாக எச்சரித்துள்ளது. இதனால் முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா, மன்னார் பகுதிகளை உள்ளடக்கிய வன்னி பெருநிலப் பரப்பில் உள்ள இலங்கை

(3ஆம் பக்கம் பார்க்க)

## இன்று படகுச்சேவை

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று மட்டும் வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியற் துறையினர் அறிவித்துள்ளனர்.

## சிறிலங்கா படையினரால் குடும்பஸ்தர் கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வாகரையில் சிறிலங்காப்படையினரால் 4 குடும்பஸ்தர்கள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். ஐந்து பிள்ளைகளின் தந்தை கணபதிப்பிள்ளை கிருஷ்ணமூர்த்தி (35), ஒருபிள்ளையின் தந்தை ஆறுமுகம் சிவராஜா (25), திருமணமானவர்களான கணபதிப்பிள்ளை சந்திரன் (20), கணபதிப் பிள்ளை நாகராசா (30) ஆகியோரே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டவர்களாவர்.

## வரி விளம்பரம்

### மார்க்கோசின் பூச்சிகொல்லி

மார்க்கோசின் செய்திறன் கொண்ட சிறந்த பூச்சி கொல்லி பயிரில் துரிதமாகப் பரவும் தன்மை நிறைந்தது பூச்சி, புழுக்கள், அழுக்கணவன் முதலியவற்றின் விருத்தியைத்தடுக்கிறது. பூச்சிகள் எதிர்ப்புச்சக்தி விருத்தி செய்வதைக்கட்டுப்படுத்துகிறது.

''லங்கெம் லிமிட்'' (விவசாய இரசாயன விற்பனையாளர், மின்சாரநிலையவீதி, யாழ்நகரிலும் விற்பனையாகிறது. ''மில்க்வைற்''

(-சி8196)

### விற்பனைக்கு

அரசாங்க, தமிழீழ விடுமுறை நாட்கள் அடங்கிய படக் கலண்டர்கள் ரூபா 6|-க்கு எம்மிடம் விலாசம் பதிப்பித்து பெற்றுக்கொள்ளலாம் மற்றும் பெரிய, நடுத்தரக் கலண்டர்களுக்கும் ஸ்ரீ லங்கா அச்சகம், ராஜா தியேட்டர் அருகாமை, ஸ்ரீ காந்தா அச்சக லேன், யாழ்ப்பாணம். (7065)

### புதிய நிர்வாகிகள் தெரிவாகினர்

இணுவில் சிவகாமசுந்தரி சனசமூக நிலையத்தினர் புதிய ஆண்டிற்கான புதிய நிர்வாகிகளை சென்ற வாரம் தெரிவு செய்தனர். செ. உதயகுமாரன் தலைவராகவும், செ. சத்தியராஜா செயலாளராகவும், ம. சர்வேஸ்வரன் பொருளாளராகவும், தெரிவு செய்யப்பட்டுள்ளனர். உபசெயலாளராக சோ. விக்கினேஸ்வரனும், உப தலைவராக கு. ரவிச்சந்திரனும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

### வருடாந்தப் பொதுக் கூட்டம்

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 75-வது வருடாந்தப் பொதுக் கூட்டமும், புதிய நிர்வாக சபைத் தெரிவும் இன்று நிலையமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

### அமரர் எம்.ஜி.ஆர் நினைவுமலர் வெளியீடு

(யாழ்ப்பாணம்)


ஜோ. எகட்டனின

ஜெசித்தாராவின்

உணவுப்பார்சல்களை (மீன், மரக்கறி, இறைச்சி)

தினமும் காலை 11.45 முதல் பிற்பகல் 3.30 மணிவரை

பெற்றுக் கொள்ளலாம்

ஜோ. எகட்டனின்

ஜெசித்தாரா

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி

முன் ஒழுங்கை

சுண்டுக்குளி. (சி-8187)


## நான்காம் ஆண்டு நினைவலைகள்



தாயின் மடியில்

02-06-1970

தாய்மண்ணின் மடியில்

28-12-1989

### வீரவேங்கை இவான

### (லோகேஸ்வரன் மனோகரன்)

மானிடம் மண்ணில் மரணித்துப் போனதால் - இவ(ா)ன்
போரிட புலியாய் எழுந்து போனான்.
தமிழீழ மந்திரம் வேதமாய் ஒலித்திட - இவ(ா)ன்
வேளை பார்த்து வேங்கையாய் போனான்.
சாற்றும் சரித்திரம் சான்றுகள் காட்டி - இவ(ா)ன்
சிந்திய குருதியின் சிவப்பினைக் கூறும்.
தேகம் கொடுத்து தேசத்தை தேடியதால் - இவ(ா)ன்
வீழ்ந்த மண்ணில் வித்தாகி எழுந்தான் - இவ(ா)ன்
முடிவு இங்கு விடிவினைக் கூறும்.
விலங்குகள் உடையும் விடுதலை கிடைக்கும்.

இவருடன் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட ஏனைய மாவீரர்களையும் இந்நாளில் நினைவுகூருகிறோம்.

டச்சு வீதி, சித்தன்கேணி. (7023) குடும்பத்தினர், நண்பர்கள், உறவினர்கள்.

## நினைவுகூருகின்றோம்...

### 1993-12-28

1985ஆம் ஆண்டு இதேதினத்தில் திருமலை, இறக்கண்டிப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது சுடப்பட்டு வீரச்சாவெய்திய,

**மைக்கல்** (சண்முகம் சுப்பிரமணியம்-6-ம் கட்டை, சாம்பல்தீவு-திருமலை)

**கோணேஷ்** (பொன்னுத்துரை கௌரிராமன்-பன்குளம்-திருமலை)

**லோகன்** (பொன்னுத்துரை உதயகுமார்-பன்குளம் -திருமலை)

1987ஆம் ஆண்டு வற்றாப்பளையிலிருந்து, முல்லைத்தீவு நகர்நோக்கி பயணம் செய்தபோது இந்தியப்படையினரால் கைதுசெய்யப்பட்டபின்னர் காணாமல் போன வற்றாப்பளையைச் சேர்ந்த கணவர் மனைவி மற்றும் 2 குழந்தைகள்.

1989ஆம் ஆண்டு வவுனியா, நெளுக்குளம் பகுதியில் தேசவிரோதிகளின் முகாம்மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின்போது வீரச்சாவெய்திய,

**கப்டன் சுதர்சன்** (வே. ஆறுமுகநாதன்-திருமலை)

**சாள்ஸ்** (— ஜெகதீஸ்வரன்-கணுக்கேணி, முள்ளியவளை-முல்லைத்தீவு)

**2-ம் லெப்.சிலன்** (பரஞ்சோதிராசா உமாகாந்தன்-குலசிங்கம்வீதி-துணுக்காய்)

முசல்குத்திப்பகுதியில் தேசவிரோதிகளுடனான சமரில் வீரச்சாவெய்திய,

**கப்டன் பெரியண்ணை-றீகன்** (தங்கத்துரை பரமலிங்கம்-தண்ணீரூற்று - முல்லைத்தீவு)

**லெப்.அமுதாப்** (பிரான்சிஸ்திரேஸ் பத்மநாதன் சிலாவத்தை-முல்லைத்தீவு)

**றிச்சாட்** (கோவிந்தசாமி அசோக்குமார்-வாரிக்குட்டியூர்-வவுனியா)

**சுசிலன்** (பரந்தாமன் மங்களேஸ்வரன் - இரணை இலுப்பைக்குளம்-வவுனியா)

**வேந்தன்** (வை. செல்வநாயகம்-சின்னத்தம்பனை, நேரியகுளம்-வவுனியா)

**கங்கை** (நடராசா ராஜேஸ்வரன்-கணேசபுரம்:கிளிநொச்சி)

**தனம்** (வடிவேல் சிவபாலன்-மானிப்பாய்வீதி-யாழ்)

**இவான்** (லோகேஸ்வரன் மனோகரன்-பிரதானவீதி, சங்கானை-யாழ்)

**அருள்** (நா நாகராசா-)

யாழ்-கொடிகாமம் பகுதியில் தேசவிரோதிகளினால் தனது வியாபாரநிலையத்தின் முன்னால் வைத்துச் சுட்டுக்கொல்லப்பட்ட,

குளிர்பான உரிமையாளர்,

**நடேசு** (கச்சாய்வெளி-பளை)

**கண்ணன்** (கொடிகாமம்)

1990ஆம் ஆண்டு வீமன்காமம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய.

**பாலா** (இராசையா தவனேசன்- நாவற்காடு, அச்சுவேலிதெற்கு-யாழ்)

மன்னார்-நானாட்டான் பகுதியில் வங்காலை முகாமிலிருந்து முன்னேறமுயன்ற சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**கெனட்** (பாக்கியராசா அன்ரனி பேனாட் - பனங்கட்டிக்கொட்டு - மன்னார்)

1991ஆம் ஆண்டு ஆ. க. வெ. நடவடிக்கையின் போது ஏற்பட்ட சமரில் விழுப்புண் அடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் போது வீரச்சாவெய்திய -

**2-ம் லெப். அசோகா** (இந்திரகுமாரி சிவகுரு - புலோலி மேற்கு - பருத்தித்துறை)

மட்டு - சத்துருக்கொண்டான் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய -

**கௌரி|செல்வராஜ்** (கருவேப்பங்கேணி - மட்டு)

1992ஆம் ஆண்டு திருமலை - கந்தளாய்ப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில வீரச்சாவெய்திய -

**மேஜர் தமிழேந்தி|கோபி** (கதிரவேலுப்பிள்ளை காளியப்பு - மேற்குடியிருப்பு, தம்பலகமம் - திருமலை)

**கப்டன் விபுலன்|தோன்றல்** (வேலாயுதம் பரமேஸ்வரன் - கந்தளாய் - திருமலை)

**லெப். மண்டலோ |பொற்கைமாறன்** (முருகையா முரளி - சந்திபுரம், பன்குளம் - திருமலை)

தெல்லிப்பழைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய -

**லெப். நீலவண்ணன்** (இறேசியன் ஆனந் - குருநகர் - யாழ்)

**2-ம் லெப். நாவல்லவன் |பிரதீப்** (தர்மலிங்கம் சுரேஸ் - தாவடி தெற்கு, கொக்குவில் - யாழ்)

ஆகியோரை இந்நாளில்

நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி-8225)


விழாக் காலங்களில் பஞ்சாமிர்தம் தயார் செய்ய

பலாப்பழம் கிடைக்கவில்லையா?

அல்லது

விலை அதிகமா?

கவலையை விடுங்கள்

இன்றே ரேஸ்ரி அளிக்கும்

பலாப்பழ அமிர்தம்

உங்கள் தேவையை பூர்த்தி செய்கிறது.

முற்றிலும் தூய்மையாக்கப்பட்டது.

TASTE LINE INDUSTRIES (PVT) LTD

14, Seeniar Lane, Jaffna (சி/8197)


## 5-ம், 2-ம் ஆண்டு நீங்காத நினைவலைகள்

ள்ளனர். உபசெயலாளராக சோ. விக்கினேஸ்வரனும், உப தலைவராக கு. ரவிச்சந்திரனும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

### வருடாந்தப் பொதுக் கூட்டம்

அரியாலை சரஸ்வதி சன சமூக நிலையத்தின் 75-வது வருடாந்தப் பொதுக் கூட்டமும், புதிய நிர்வாக சபைத் தெரிவும் இன்று நிலையமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

### அமரர் எம்.ஜி.ஆர் நினைவுமலர் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

முன்னாள் தமிழக முதல்வர் எம். ஜி. இராமச்சந்திரனின் ஆறாவது ஆண்டு நினைவுப் பொதுக்கூட்டம் நேற்று முன்தினம் தாவடிப் பிள்ளையார் கோவில் முன்றலில் நடைபெற்றது. அனைத்துலக எம். ஜி. ஆர் பேரவையின்தலைவர் பொன். மதிமுகராசா தலைமையில் நடைபெற்ற மேற்படி பொதுக் கூட்டத்தில், யாழ்ப்பாண உதவி அரசாங்க அதிபர் க. குணராசா, நல்லூர் ஆதீன முதல்வர்சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் பேராசிரியர் அ. சண்முகதாஸ் ஆகியோர் உரை நிகழ்த்தினர். எம். ஜி. ஆர் நினைவு மலர் வெளியிட்டு வைக்கப்பட்டதைத் தொடர்ந்து கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

### விண்ணப்பிக்கலாம்

(யாழ்ப்பாணம்)

1994 ஆம் ஆண்டுக்கு ஆண்டு 1 முதல் ஆண்டு 5 வரையான மாணவர்களுக்கான அனுமதிக்கு விண்ணப்பிக்க முடியும் என புங்குடுதீவு அமெரிக்கன்மிசன்வித்தியாலய அதிபர் அறியத்தருகிறார்

### சமய அறிவுப் போட்டி

(பருத்தித்துறை)

இலங்கை சைவ மன்றம் பாடசாலை மாணவர்களின் சமய அறிவைமேம் படுத்தும் முகமாக நடாத்திய சைவ சமய பாடப்பொதுப் பரீட்சையில் அதி கூடிய புள்ளிகளைப் பெறும் மாணவருக்கு தங்கப் பதக்கம் பரிசாக வழங்கவுள்ளது. இப்பரிசளிப்பு விழா அடுத்த மாதம் நடுப்பகுதியில் இலங்கை சைவ மன்றத் தலைவர். பேராசிரியர் வி.க. கணேசலிங்கம் தலைமையில் நடைபெறுமென சைவ மன்றச் செயலாளர் திரு, வே. புவனேந்திரன் தெரிவித்துள்ளார். (25)

---

தேசம் கொடுத்து தேசத்தை தேடியதால் - இவ(ர்)ன் வீழ்ந்த மண்ணில் வித்தாகி எழுந்தான் - இவ(ர)ன் முடிவு இங்கு விடிவினைக் கூறும்.
விலங்குகள் உடையும் விடுதலை கிடைக்கும்.

இவருடன் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட ஏனைய மாவீரர்களையும் இந்நாளில் நினைவுகூருகிறோம்.

டச்சு வீதி, சித்தன்கேணி. (7023) குடும்பத்தினர், நண்பர்கள், உறவினர்கள்.

---

நடேசு (கச்சாய்வெளி-பளை)

கண்ணன் (கொடிகாமம்)

1990ஆம் ஆண்டு வீமன்காமம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய.

பாலா (இராசையா தவனேசன்- நாவற்காடு, அச்சுவேலிதெற்கு-யாழ்)

மன்னார்-நானாட்டான் பகுதியில் வங்காலை முகாமிலிருந்து முன்னேறமுயன்ற சிறிலங்கா இரா

---

லிங்கம் சுரேஸ் - தாவடி தெற்கு, கொக்குவில் - யாழ்)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்

தமிழீழ விடுதலைப்புலிகள்

(சி-8225)

---

# 5-ம், 2-ம் ஆண்டு நீங்காத நினைவலைகள்



(இந்தியப் படையினருடனான சமரில்)

**லெப்டினனட் அசோக்**

(சிவகுரு சிறிதரன்)

பிறப்பு: 05.10.1966
வீரச்சாவு: 07.12.1988



(ஆ. க. வெ. சமரில் காயமுற்று சிகிச்சையின்போது)

**2-ம் லெப். அசோகா**

(சிவகுரு இந்திரகுமாரி)

பிறப்பு: 23-10-1970
வீரச்சாவு: 28-12-1991



**சின்ன அசோக்**

(சிவகுரு இளங்கோதரன்)

பிறப்பு: 16-01-1972
இயற்கை மரணம்: 10-03-1991

(அசோக், அசோகா வீதி; புலோலி மேற்கு, பருத்தித்துறை)

ஆண்டுகள் ஐந்தும் இரண்டும் ஓடி மறைந்தன
நீங்காத நினைவு நாளாம் இந்நாள்
தாயக மண்ணை மீட்டெடுக்க — இந்த
மண்ணை முத்தமிட்ட நாள்.

தலைவன் வழி சென்றீர் — தளராத துணிவுடன் மடிந்தீர்
நீங்கள் நேசித்த தமிழீழம் விடிவு பெற்றுக்கொண்டிருக்கின்றது
எம் நெஞ்சங்களில் வீற்றிருக்கும் எம் இனிய
சகோதர வேங்கைகளே!...
மலரும் தமிழீழத்தில் பவனி வருவீர்கள்.

இன்று எம் இல்லத்தில் நடைபெறும் நினைவஞ்சலி நிகழ்வில் சகபோராளிகள், உறவினர், நண்பர்கள் யாவரையும் கலந்துகொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

முகவரி: ஓடக்கரை, பருத்தித்துறை

- குடும்பத்தினர் (7036)

நல்லூர் இளை நூலகம்

## சிந்தனைக்கு

தேசியம் என்பது தேசத்திடம் ஆழ்ந்த அன்பு கொண்டு தேசத்திற்காக வாழ்வு, விடுதலை, உடமை, அனைத்தையும் தியாகம் செய்ய சித்தமாகவுள்ள உறுதியான உணர்வு. - சுவாமி ராம்கீர்த்


# ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 28-12-1993

தொலைபேசி

ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 2023


## ஒடுக்குமுறையாளர் கற்றுக்கொடுக்கும் பாடம்

உலகில் இன்று நடைபெற்று வரும் சம்பவங்கள் பலருக்கு ஆச்சரியத்தையும், அதிர்ச்சியையும் அளிக்கலாம். ஆனால், தேசிய இனங்களின் விடுதலைப் போராட்டத்தை ஆயுத ரீதியாக வெற்றி கொள்ள முடியாது என்பதை அவை உலகிற்கு மீண்டும் மீண்டும் உணர்த்துபவையாக உள்ள ஒரு யதார்த்தத்தின் பிரதிபலிப்புக்களே ஆகும்.

உலகில் முதல் எதிரிகளாகக் கருதப்பட்ட பாலஸ்தீன விடுதலை இயக்கமும் - இஸ்ரேலும் சமாதான உடன்பாடு செய்து கொண்டன. ஒருவரை ஒருவர் வெறுத்தொதுக்கிய தென்னாபிரிக்க கறுப்பர்களும், வெள்ளையர்களும் சமாதான முறையில் பிரச்சினையைத் தீர்க்க முற்பட்டுள்ளனர். ஐரிஸ் விடுதலை இயக்கத்தை பயங்கரவாதிகள், பயங்கரவாதிகள் எனக் கூக்குரல் இட்ட பிரிட்டன் 'கன்சவேட்டிவ்' அரசாங்கம் இரகசியப் பேச்சுவார்த்தை நடத்தி உடன்பாட்டிலும் கையெழுத்து இட்டுள்ளது.

இவ்உடன்பாட்டு சரத்துக்கள் ஒருவரின் பலம், பலவீனம் என்பவற்றைப் பிரதிபலிப்பவையாக இருப்பினும் ஒருதரப்பு பிரச்சினையை எதிர்த் தரப்பு ஏற்றுக்கொண்டமையால் காணப்பட்டவையே ஆகும்.

அதாவது, தேசிய இனவிடுதலைப் போராட்டங்களை பயங்கரவாத நடவடிக்கை எனக் குறிப்பிடுவதாலோ அன்றி இராணுவத்தை ஏவி வருவதாலோ பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியாது. மேற்கூறப்பட்ட ஆட்சியாளர் சகலரும் இராணுவத் தீர்விற்கு முயற்சிக்காமல் இருந்ததும் இல்லை. முயற்சி தோற்றுப் போனதினாலேயே சமரசம் பற்றி உடன்பாடுகள் செய்ய முற்பட்டுள்ளனர்.

அத்தோடு, மேற்கூறப்பட்ட அரசுகள் யாவும் சிறிலங்கா அரசைவிட இராணுவ மற்றும் பொருளாதார பலத்தில் வலுவுள்ள நாடுகள். தமக்கென வலுவான பொருளாதார அமைப்புக்களைக் கொண்டுள்ளதோடு, தமக்குத் தேவையான இராணுவத் தளபாடங்களில் பெரும்பாலானவற்றை உற்பத்தியும் செய்யும் ஆற்றல் கொண்டவை. இருப்பினும், இந்நாடுகள் போரை நடத்தி வெற்றி காண முடியாது என்ற நிலையிலேயே தமது பழைய சித்தாந்தங்களையும் நடவடிக்கைகளையும் கைவிட்டு சமாதானத்திற்கு முற்பட்டுள்ளன.

## இராணுவ வாகனங்களின் பாவனை; கண்காணிக்க உத்தரவு

இராணுவ வாகனங்கள் துஷ்பிரயோகம் செய்யப்படுவதைக் கட்டுப்படுத்தவும் சட்டவிரோதமாக பொருள்களை ஏற்றிச் செல்வதை தடுக்கவும் நாட்டின் பல பாகங்களில் இராணுவ வாகனங்களை சோதனையிடும் காவல் சாவடிகள் அமைக்கப்பட்டு இராணுவ பொலிசார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

பாதுகாப்பு அமைச்சிற்கு அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து மேற்படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இராணுவத்தினரிற்கு ஐயாயிரத்திற்கும் அதிகமான வாகனங்கள் இருக்கின்றன. வாகனங்கள் சட்டவிரோத பிரயாணத்திற்கு பயன்படுவதாக கடந்த சில காலமாக முறைப்பாடுகள் கிடைத்து வந்தன.

இராணுவ வாகனங்களில் எத்தனை உயர் அதிகாரிகள் பிரயாணம் செய்தாலும் இராணுவ பொலிசார் அந்த வாகனங்களை நிறுத்தி பயணத்தின் நோக்கம் பிரயாணம் செய்பவர்களின் விபரங்கள் ஆகியவற்றை பெற்றுக் கொள்வதுடன் வாகனங்களையும் சோதனையிடுமாறு இராணுவ பொலிசாரிற்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

## வெள்ள நிவாரணம் வழங்க பிரதேச செயலர் முயற்சி

(தொல்புரம்)

வலிமேற்கில் அண்மைக்காலமாக பெய்த பெருமழையினால் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் பாதிக்கப்பட்ட இடம்பெயர்ந்தோர் முகாம்களில் வதியும் மக்களுக்கு வெள்ள நிவாரணம் வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

வலிமேற்கு சங்கானை பிரதேச செயலரினால் எடுக்கப்பட்ட துரித முயற்சியினால் சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த வெள்ளத்தினால் பாதிப்படைந்து அல்லலுறும் இடம்பெயர்ந்தோர் முகாம்களில் உள்ள மக்களுக்கு வெள்ள நிவாரணமாக உலர் உணவு வழங்கப்படவுள்ளதென தெரியவருகிறது. (41)

## கிணற்றிற் குள் தவறிவீழ்ந்து சிறுவன் மரணமானார்

(தொல்புரம்)

சங்கானையில் கிணறு ஒன்றிற்கு குளிக்கச் சென்ற சிறுவன் கிணற்றினுள்ளிருந்து சடலமாக மீட்கப்பட்டான்.

நேற்று முன்தினம் நடைபெற்ற இச்சோக சம்பவத்தில் சங்கானை பாரதிலேனைச் சேர்ந்த குணசேகரம் சிவராசா (வயது 12) என்பவரே பரிதாபகரமான மரணத்தை தழுவிக்கொண்டவராவார்.

மரணமான இச்சிறுவன் சங்கானையில் உள்ள பேக்கறி ஒன்றில் பகுதிநேர ஊழியராக சுமார் மூன்றரை வருடங்கள் வேலை செய்து வந்ததாகவும் சம்பவதினம் அங்குள்ள கிணற்றில் பகல் சுமார் 2.30 மணியளவில் குளிப்பதற்காக சென்றவரைக் காணாததினால் பல இடமும் தேடிவிட்டு குளிப்பதற்கு பாவித்த வாளியை தேடிப்பார்த்தபோது வாளியையும் காணாததினால் கிணற்றில் இறங்கி நீரினுள் தேடிப்பார்த்தபோது அவரது சடலம் அகப்பட்டது எனவும் சடலம் மீட்டெடுக்கும் போது சுமார் இரவு 10.30 மணியளவில் இருக்கும் எனவும் இறந்தவரது தந்தையான குணசேகரம் கண்ணீர் ததும்ப அழுதவாறு தெரிவித்தார். (41)

## கல்வித் திணைக்களத்தில் வெள்ளம் புகுந்தது

அண்மையில் பெய்த கடும் மழையினால் முல்லைத்தீவு மாவட்ட கல்வித் திணைக்களத்தினுள் வெள்ளம் புகுந்தது. இதனால் ஆசிரியர்களின் சுயவிபரக் கோவைகள் யாவும் நனைந்து போயுள்ளன. எனக் கூறப்படுகிறது.

## மட்டு ஆசிரியர்களுக்கு புதிய அடையாள அட்டை

(செங்கலடி)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள ஆசிரியர்களுக்கு மட்டக்களப்பு மாவட்ட கல்வித்திணைக்களத்தினால் புதிய அடையாள அட்டைகள் வழங்கப்படவுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள ஆசிரியர்கள் பிரயாணங்களின் போது அடையாள அட்டை இல்லாது பல்வேறு சிரமங்களிற்கு உள்ளாகி வருவதை அடுத்தே இந் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கென ஒரு தொகுதி அடையாள அட்டைகள் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பிரதிக்கல்வி அலுவலகங்களிற்கு மட்டக்களப்பு மாவட்டக் கல்விப்பணிப்பாளர் அனுப்பி வைத்துள்ளார்.

## ஆசிரியரின் தாக்குதலால் மாணவன்பலி; ஒருவர்காயம்

-பண்டாரவளையில் சம்பவம்

தொண்டர்ஆசிரியர்ஒருவர் இருமாணவர்களை கத்தியினால் குத்தினார் ஒருமாணவன் ஸ்தலத்திலேயே மரணமானார் மற்றுமொரு மாணவன்பதுளை வைத்தியசாலையில் உயிருக்காகப் போராடிக் கொண்டிருக்கிறார். இச்...

...பெற்ற சிறு தகராறு காரணமாக இரண்டுமாணவர்களை கத்தியினால் குத்தினார் பொன்னுசாமி சிவலிங்கம் (19) என்ற மாணவன் ஸ்தலத்திலேயே மரணமானார் மற்றுமொரு மாணவனான விக்னேஸ்வரன் என்பவரின்...

## ஒளிவிழா

ஏழாம் நாள் அட்வெண்டிஸ் திருச்சபையின் ஆண்டு இறுதி ஒளிவிழா நிகழ்ச்சிகள் இன்று மாலை 3.00மணிக்கு இறை வணக்கத்துடன் ஆரம்பமாகும் சபை மூப்பர் தலை...

## கானா அதிபர்புதுடில்லிக்கு உத்தியோக பூர்வ விஜயம்

(டில்லி)

கானாவின் அதிபர், கெட்டி எபரட் ஜெகன் அரசுமுறையிலான பயணம் ஒன்றை மேற்கொண்டு நேற்று முன்தினம் புதுடில்லி வந்து சேர்ந்தார். குடியரசுத்தலைவர் மாளிகையில், விமரிசையான வரவேற்பு அவருக்கு வழங்கப்படவுள்ளது குடியரசுத் தலைவர் டாக்டர் சங்கர் தயாள் சர்மா, பிரதமர் பி.வி.நரசிம்மராவ் ஆகியோருடன் உத்தியோகபூர்வ பேச்சுக்களை நடத்தும் அவர் தொடர்ந்து, மத்திய வெளியுறவு அமைச்சர், வேளாண்மைத் துறை அமைச்சர், மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சர், வழக்கமாக அல்லாத எரிபொருள் துறை அமைச்சர், போன்றோரையும் இந்திய தொழில்அதிபர்களையும் சந்தித்து பேச்சு நடத்தவுள்ளார்.

## சர்வாதிகார ஆட்சியே இந்தியாவிற்கு தேவை

### நகரமக்கள் கருத்து

(டில்லி)

இந்தியாவை ஒரு சர்வாதிகாரியே ஆள வேண்டும் என நகரப்பகுதி மக்களில் பெரும்பாலானவர்கள் விரும்புவதாக கருத்துக்கணிப்பு ஒன்று கூறுகின்றது. இந்தியாவின் 58 சதவீத நகரவாசிகள் இவ்விருப்பை வெளியிட்டதாக மார்க் நிறுவனம் நடத்திய கருத்துக் கணிப்பு கூறுகிறது

வெளிநாட்டில் வேலை செய்யவே 86 சதவீதமான இந்தியர்கள் விருப்பம் தெரிவித்துள்ளதாகவும் அக்கருத்து கணிப்பு மூலம் தெரியவந்துள்ளது.

## பாலஸ்தீன விடுதலை இயக்க அதிகாரிகள் பதவி துறப்பு

(ரீயூனில்)

பாலஸ்தீன விடுதலைஇயக்கத் தலைவர் யாசீர் அரபாத் இஸ்ரேலுடனான பேச்சுவார்த்தைகளைக் கையாளும் விதத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து பாலஸ்தீன விடுதலை இயக்கத்தை சேர்ந்த அதிகாரிகள் பலர் தத்தம் பதவிகளை துறந்துள்ளனர். செமி அபூ சபாடான் என்னும் காஸாப் பகுதியைச் சேர்ந்த பத்தா இயக்கத்தின் மூத்த அதிகாரியும் பதவி துறந்தவர்களில் ஒருவராவார். இவர் கடந்த ஆறு ஆண்டுகளாக காஸாப் பகுதியில் நீடிக்கும் கிளர்ச்சி இயக்கத்தை வழி நடத்தியவர்களில் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது. பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் வெளி விவகாரப் பிரிவின் பேச்சாளரான மகமட் அராஸ் இன்று கெய்ரோவில் ஆரம்பிக்க இருக்கும் பேச்சுவார்த்தைகளில் தான் கலந்து கொள்ளப் போவதில்லை என்று அறிவித்துள்ளார்.

காஸாப் பகுதியிலிருந்தும், ஜெரிக்கோ நகரப் பகுதியிலிருந்தும் இஸ்ரேலியத் துருப்புகள் மீளப்பெறப்படுவதில் தாமதம் ஏற்பட்டதை தொடர்ந்து இஸ்ரேலிய பாலஸ்தீனிய பேச்சுவார்த்தைகளில் முட்டுக்கட்டை நிலை ஏற்பட்டது தெரிந்ததே.

## பருத்தித்துறை நகரத்தில் பொதுமலசலகூடமில்லை

(வடமராட்சி)

பருத்தித்துறை நகரப்பகுதியில் நீண்ட காலமாக பொது மலசல கூடம்இல்லாததனால் நகரப்பகுதிக்கு அன்றாட தேவையின் பொருட்டு தினமும் வருகின்ற பொதுமக்கள் அசௌகரியங்களுக்கு முகம் கொடுக்க நேரிட்டு வருகிறது.

மையப்பகுதியாக இருந்து வருகின்ற போதிலும் அங்கு வருகின்ற ஆயிரக்கணக்கான மக்களுக்கு பொது மலசல கூடம் இல்லாதது பெரும் கஷ்ட நிலையை உண்டுபண்ணுகிறது.

முன்னர் பல மலசலகூடங்கள் இருந்த போதிலும் தற்...

ஒருதரப்பு பிரச்சினையை எதிர்த் தரப்பு ஏற்றுக்கொண்டமையால் காணப்பட்டவையே ஆகும்.

அதாவது, தேசிய இனவிடுதலைப் போராட்டங்களை பயங்கரவாத நடவடிக்கை எனக் குறிப்பிடுவதாலோ அன்றி இராணுவத்தை ஏவி வருவதாலோ பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியாது. மேற்கூறப்பட்ட ஆட்சியாளர் சகலரும் இராணுவத் தீர்விற்கு முயற்சிக்காமல் இருந்ததும் இல்லை. முயற்சி தோற்றுப் போனதினாலேயே சமரசம் பற்றி உடன்பாடுகள் செய்ய முற்பட்டுள்ளனர்.

அத்தோடு, மேற்கூறப்பட்ட அரசுகள் யாவும் சிறிலங்கா அரசைவிட இராணுவ மற்றும் பொருளாதார பலத்தில் வலுவுள்ள நாடுகள். தமக்கென வலுவான பொருளாதார அமைப்புக்களைக் கொண்டுள்ளதோடு, தமக்குத் தேவையான இராணுவத் தளபாடங்களில் பெரும்பாலானவற்றை உற்பத்தியும் செய்யும் ஆற்றல் கொண்டவை. இருப்பினும், இந்நாடுகள் போரை நடத்தி வெற்றி காணமுடியாது என்ற நிலையிலேயே தமது பழைய சித்தாந்தங்களையும் நடவடிக்கைகளையும் கைவிட்டு சமாதானத்திற்கு முற்பட்டுள்ளன.

ஆனால், சிறிலங்கா அரசாங்கமோ தனது நேரடி அனுபவத்தில் இருந்தோ, அன்றி உலக அனுபவத்தில் இருந்தோ பாடம் கற்றுக் கொள்வதாக இல்லை. ஒரு தேசிய இனத்தின் சிக்கல் நிறைந்த பிரச்சினையை எழுமாற்றாகப் பயங்கரவாதப் பிரச்சினை எனக் கூறி விடுவதினால் பிரச்சினை தீர்ந்து விடும் எனக் கருதுவது வேடிக்கையானது மட்டுமல்ல. முற்றிலும் அரசியல் விவேகமற்ற செயலுமாகும்.

இதேவேளை, அண்மைக் காலம் வரை அரசாங்கத்துடன் ஒத்துப்பாடிய சில பேரினவாதப் பத்திரிகைகள் இனப்பிரச்சினைக்கு அரசாங்கம் ஏன் அரசியல் தீர்வு காண முற்படக் கூடாது என்ற ரீதியில் கேள்விகள் கேட்க முற்பட்டுள்ளமையானது வரவேற்கத்தக்கதாகும். இது இன்றைய உலகில் ஏற்பட்டுவரும் மாற்றத்தின் அடிப்படையில் என அவை கூற முனையலாம். ஆனாலும் இப்பத்திரிகைகளும் இராணுவ ரீதியாக ஏற்பட்ட தோல்விகளைக் கொண்டே தமது நிலைப்பாட்டை மறுபரிசீலனை செய்யத் தொடங்கியுள்ளன என்பதே உண்மையாகும்.

ஆனால், இலங்கையில் தமிழர் தேசிய இனப்பிரச்சினை என்பது உலகிலுள்ள மற்றைய போராட்டங்களை விட வித்தியாசமானது. பெரும் அர்ப்பணிப்புக்களினாலும் பலரின் தியாகங்களினாலும், மனோவலிமையினாலும் கட்டி எழுப்பப்பட்டது. இந்நிலையில், இப்போராட்டத்தின் தார்மீக பலம் வலிமையானது. அத்தோடு, பாலஸ்தீன விடுதலை இயக்கம் போன்று ஒரு கையாலாகா சக்தியாக விடுதலைப் புலிகள் இயக்கம் இல்லை.

இந்நிலையில், இலங்கையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்பது தமிழரின் சுதந்திரம், பாதுகாப்பு என்பன தொடர்பாக எந்தவித விட்டுக்கொடுப்புக்களுக்கும் அப்பாற்பட்டது, தமிழர் தாயகம் என்பது கேள்விக்கு இடமில்லாத ஒன்று, அதாவது, இலங்கையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்பது சம அந்தஸ்துடைய இரு இனங்கள் அன்றி இரு அரசுகள் என்ற ரீதியிலேயே பேச்சுவார்த்தைகள் நடத்தக்கூடியவை ஆகும்.

இந்த வகையில், இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு சாத்தியமாகப் போவதில்லை என்பது மட்டுமல்ல, இப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு என்பது உயர்ந்த மட்ட நிலை ஒன்றில் வைத்தே காணமுடியும் என்பதை சிறிலங்கா அரசு புரிந்துகொள்ளவேண்டும். அவ்வாறு அதைப் புரிந்துகொள்ளவோ அன்றி புரிந்துகொண்டதை ஏற்காது போவதோ இலங்கையில் பிரச்சினைகள் மேலும் தீவிரமாவதற்கும், தமிழீழ அரசு உருவாவதற்கும் வழி வகுக்குமே ஒழிய டி. பி. விஜேதுங்க அரசாங்கம் எண்ணுவதுபோன்று தமிழர் தேசிய இன விடுதலைப் போராட்டத்தை ஒடுக்கிவிடலாம்எனக்கனவு காணுவதுமடமையாகும்.

---

டங்கள் வேலை செய்து வந்ததாகவும் சம்பவதினம் அங்குள்ள கிணற்றில்பகல் சுமார் 2.30 மணியளவில் குளிப்பதற்காக சென்றவரைக் காணாததினால் பல இடமும் தேடிவிட்டு குளிப்பதற்கு பாவித்த வாளியை தேடிப்பார்த்தபோது வாளியையும்

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள ஆசிரியர்களுக்கு மட்டக்களப்பு மாவட்ட கல்வித்திணைக்களத்தினால் புதிய அடையாள அட்டைகள் வழங்கப்படவுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள ஆசிரியர்கள் பிரயாணங்களின் போது அடையாளமின்றி வருவதை அடுத்தே இந் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கென ஒரு தொகுதி அடையாள அட்டைகள் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பிரதிக்கல்வி அலுவலகங்களிற்கு மட்டக்களப்பு மாவட்டக் கல்விப்பணிப்பாளர் அனுப்பி வைத்துள்ளார்.

# ஆசிரியரின் தாக்குதலால் மாணவன்பலி;ஒருவர்காயம்

### -பண்டாரவளையில் சம்பவம்

தொண்டர்ஆசிரியர்ஒருவர் இருமாணவர்களை கத்தியினால் குத்தினார் ஒருமாணவன் ஸ்தலந்திலேயே மரணமானார் மற்றுமொரு மாணவன்பதுளை வைத்தியசாலையில் உயிருக்காகப் போராடிக் கொண்டிருக்கிறார் இச்சம்பவம் பண்டாரவளையிலுள்ள பூனாகலை எனும் இடத்தில்நடைபெற்றது.

பண்டாரவளைபகுதிபூனாகலை தோட்ட முதலாவது டிவிசனைச் சேர்ந்த தமிழ்ப் பாடசாலையில் கல்வி கற்பிக்கும் தொண்டர் ஆசிரியர் ஒருவர் பாடசாலையில்இடம் பெற்ற சிறு தகராறு காரணமாக இரண்டுமாணவர்களை கத்தியினால் குத்தினார் பொன்னுசாமி சிவலிங்கம் (19) என்ற மாணவன் ஸ்தலத்திலேயே மரணமானார் மற்றுமொரு மாணவனான விக்னேஸ்வரன் என்பவரின் மார்பில் குத்துக் காயம் ஏற்பட்டதனால் ஆபத்தான நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் சந்தேகநபரான ஆறுமுகம் இராமகிருஷ்ணன் (ஆசிரியர்) கைதுசெய்யப்பட்டு திமாண்டில் வைக்கப் பட்டுள்ளார்.

---

## அசாத்தியத்

தல் என்று இராணுவ ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

1993-94 ஆம் ஆண்டிற்கான இராணுவவரவு-செலவுத் திட்டத்திற்கு இதுவரை இல்லாத அளவுக்கு 2,045 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. வரவு-செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்ட மறுநாள் நடந்த தாக்குதல் இது விஜேதுங்க முற்றிலும் மாறுபட்டவர். அவர் நெருப்போடு விளையாடுகிறார் என தெற்காசிய இராஜதந்திரி ஒருவர் குறிப்பிடுகிறார். அரசு பகிரங்கமாக தமிழர் விரோதக் கொள்கையை கடைப்பிடிப்பதால் விடுதலைப்புலிகளின் வலிமை அதிகரித்து வருவதாகவும் இவர் கூறுகின்றார்.

பூநகரி தோல்விக்கு பின் இராணுவத்திற்கு ஆட்சேர்ப்பு மிகுந்த சிரமமாகவே இருக்கும் என ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இதனால்ஆட்சேர்ப்பிற்கான தகுதிகள் குறைக்கப்படுகின்றன. இது மிகவும் ஏழ்மையான பிரிவினர் மட்டும் இராணுவத்தில் சேர இடமளிக்கும் என கூறப்படுகிறது.

அனுபவம் மிகுந்த படைப் பிரிவினர் இக்கட்டான சந்தர்ப்பங்களில் பணியாற்ற அழைக்கப்படுவதால் அதிக போர்களில் ஈடுபட்டு களைப்புற்ற நிலையில் உள்ளனர். இராணுவத்தின் நம்பகத் தன்மை மிகுந்த சந்தேகத்திற்குள்ளாகியுள்ளது எதிரியை தாக்கும் திறன் உள்ளதா என்ற கேள்வி ஒருபுறமிருக்கட்டும். தன்னைக் காத்துக்கொள்ளக்கூட இராணுவத்தால் முடியாது போலிருக்கின்றது என்கிறார் முன்னாள் விமானப்படைத் தளபதி ஹரி குணதிலக்கா.

வடக்கு கிழக்கு பிராந்தியத்தில் நடக்கும் போரை ஒரு முடிவுக்கு கொண்டு வருவதற்கான நிர்ப்பந்தத்தை பூநகரி சம்பவம் ஏற்படுத்தும் என நவசமசமாஜக்கட்சியின் பொதுச்செயலர் விக்கிரமபாகு கருணாரட்ன கூறியுள்ளார். இப்படிப்பட்ட ஒரு யுத்தத்தில் ஈடுபட சிங்கள தேசம் தயாராக இல்லை என்பது மிகவும் தெளிவாகிவிட்டது என்றார் என பி. ஜெயராம் தனது கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

## 10 பேர் உயிரிழப்பு

தமிழ்நாடு சிதம்பரனார் மாவட்டத்திலும் திருநெல்வேலிமாவட்டத்திலும் அடைமழை பெய்வதால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் பத்துக்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர். சிதம்பரனார் மாவட்டத்தில் சுவரிடிந்து விழுந்ததில் ஏழுபேர் உயிரிழந்ததாகவும், திருநெல்வேலி மாவட்டத்தில் தருமேனி ஆற்றில் மூன்று பேர் அடித்துச் செல்லப்பட்டதாகவும் காவல் துறை வட்டாரங்கள் கூறியுள்ளன. இதேவேளை வெள்ளப்பெருக்கின் காரணமாக மூவாயிரத்திற்கும் அதிகமானோர் இடம்பெயர்ந்து பாடசாலைக்கட்டடங்களில் தங்கியிருக்கின்றனர்.

---

## ஒளிவிழா

ஏழாம் நாள் அட்வெண்டிஸ் திருச்சபையின் ஆண்டு இறுதி ஒளிவிழா நிகழ்ச்சிகள் இன்று மாலை 3.00மணிக்கு இறை வணக்கத்துடன் ஆரம்பமாகும் சபை மூப்பர் தலைமையில் கலை நிகழ்ச்சிகள் நடைபெறும்.

* * *

நெல்லியடி எக்காளத் தொனி பூரணசுவிசேஷ சபையின் கிறிஸ்மஸ் விழா இன்று நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறுகின்றது. பாஸ்ரர் மேவின் குணச்செல்வம் நற்செய்திகளை வழங்குவார். கிறிஸ்தவ கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறுகின்றன. (25)

---

## படையினரின்

செஞ்சிலுவைச் சங்க கிளைகள் மூடப்படும் நிலை ஏற்பட்டுள்ளது.

வன்னிப்பிரதேச கிளையை சேர்ந்த இலங்கை செஞ்சிலுவைச்சங்கதலைவர், செயலர் உட்பட நான்கு அதிகாரிகளை சிறிலங்கா புலனாய்வுத் துறையினர் அண்மையில் கொழும்பில் காரணமின்றி கைது செய்ததையடுத்தே இந் நிலை ஏற்பட்டுள்ளது. இது தொடர்பாக அறிக்கை ஒன்றை வன்னிப் பிரதேச இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினர் சிறிலங்கா அரசிற்கு அனுப்பி வைத்துள்ளனர்.

இவ்வறிக்கை அனுப்பப்பட்டதை தொடர்ந்து கிளிநொச்சி இலங்கை செஞ்சிலுவை சங்கக் கிளையின் அதிகாரி ஒருவரையும் அம்புலன்ஸ் வண்டி மற்றும் அதன் சாரதியையும் வவுனியா படையினர் தடுத்து வைத்துள்ளனர். தடை செய்யப்பட்ட பொருள்களை வடபகுதிக்கு எடுத்து சென்றதாகக் கூறியே இவர்கள் படையினரால் கைதாகினார்.

---

காஸாப் பகுதியைச் சேர்ந்த பத்தா இயக்கத்தின் மூத்த அதிகாரியும் பதவி துறந்தவர்களில் ஒருவராவார். இவர் கடந்த ஆறு ஆண்டுகளாக காஸாப் பகுதியில் நீடிக்கும் கிளர்ச்சி இயக்கத்தை வழி நடத்தியவர்களில்

ருந்தும் இஸ்ரேலியத் துருப்புகள் மீளப்பெறப்படுவதில் தாமதம் ஏற்பட்டதை தொடர்ந்துஇஸ்ரேலியபாலஸ்தீனிய பேச்சுவார்த்தைகளில் முட்டுக்கட்டை நிலை ஏற்பட்டது தெரிந்ததே.

# பருத்தித்துறை நகரத்தில் பொதுமலசலகூடமில்லை

(வடமராட்சி)

பருத்தித்துறை நகரப்பகுதியில் நீண்ட காலமாக பொது மலசல கூடம்இல்லாததனால் நகரப்பகுதிக்கு அன்றாட தேவையின் பொருட்டு தினமும் வருகின்ற பொதுமக்கள் அசௌகரியங்களுக்கு முகம் கொடுக்க நேரிட்டு வருகிறது.

இப்பகுதி நூற்றுக்கணக்கான வர்த்தகநிலையங்கள், பஸ் தரிப்பு நிலையம், தனியார் நிலையங்கள், மற்றும் சந்தைகள் அமைந்த பிரதான மையப்பகுதியாக இருந்து வருகின்ற போதிலும் அங்கு வருகின்ற ஆயிரக்கணக்கான மக்களுக்கு பொது மலசல கூடம் இல்லாதது பெரும் கஷ்ட நிலையை உண்டுபண்ணுகிறது.

முன்னர் பல மலசலகூடங்கள் இருந்த போதிலும் தற்போது ஒன்றுமில்லாத நிலை ஏற்பட்டிருக்கிறது. முன்னர் இருந்த மலசல கூடங்கள் இராணுவ நடவடிக்கைகளினால் சேதமடைந்து பாவனைக்கு உதவாதவையாக உள்ளன. (யோ)

---

## உதைபந்தாட்டம்

புனித யாகப்பர் தேவாலய கட்டட நிதிக்காக குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழகம் நடாத்தும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் இன்று பாடும்மீன் எதிர் நீக்ளஸும், றோயல் எதிர் ஸ்கந்தாவும் மோத உள்ளன. முதலாவது ஆட்டம் பி.ப 3.00மணிக்கும், இரண்டாவதாட்டம் பி. ப. 4.00மணிக்கும் சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

---

## தென்மாகாண

ங்குவது பிரயோசனமற்றது என ஆளுநரால் வலியுறுத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது

இதேவேளை வரவு-செலவுத் திட்டத்தை இரகசிய வாக்கெடுப்பிற்கு விடவே தென்மாகாணசபையின் ஆளும் கட்சி விரும்புவதாக தெரிவிக்கப்படுகிறது.

---

## ஜனாதிபதி

ஐக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன. மேலும் எக்கட்சிகளின் ஆதரவைப் பெறுவது என்பது குறித்து ஆராயப்பட்டுவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை சப்பிரகமுவா மாகாண சடையின் நவசமசமாஜக்கட்சி உறுப்பினர் சிறிபாலகிரிஎல்ல அக்கட்சியிலிருந்து விலகி சிறிலங்கா சுதந்திரக்கட்சியில் சேர்ந்துள்ளார்.

---

## விண்ணப்ப முடிவு நீடிப்பு

யாழ். மாவட்டத்தில் தற்போது கூடுதலான மழை வீழ்ச்சி காணப்படுவதனால் வதிவிடங்களில் பயிர்ச்செய்கையை மேற்கொள்ள முடியாத நிலை தோன்றியுள்ளது இதனைக் கருத்திற் கொண்டு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் நடாத்தப்பட இருக்கும் வதிவிட வேளாண்மைப் போட்டிக்கான விண்ணப்ப முடிவு திகதி போட்டியாளர்களின் நலன் கருதி 15-01-1994வரை நீடிக்கப்பட்டுள்ளது.

இதனால் போட்டிகள் பார்வையிடலும் அதற்கேற்ப மாற்றியமைக்கப்பட்டுள்ளது முதலாம் கட்டம் பார்வையிடுதல் 1-03-1994தொடக்கம் 20-03-1994வரையான காலப்பகுதியினுள் மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

---

## வாந்திபேதி

நோயாளிகள் இருவர் மரணமடைந்துள்ளனர்.

பருத்தித்துறையைச் சேர்ந்த தேவசகாயம் (வயது60), கரவெட்டியைச் சேர்ந்த மாணிக்கம் (வயது65) ஆகியோரே இந்நோய்க்கு இலக்காகி இறந்தவர்களாவர். (யோ)


**உழவும் தொழிலும் உனைக் காக்க**

**வளமாய் தேக்கு வருநீரை**

## 45ஆம் நாள் நினைவலைகளும் நன்றி நவிலலும்



மலர்வு:
12-06-1963

உதிர்வு:
15-11-1993

### அ. அன்ரன் ஜீவகுணரட்ணம்

(ஆசிரியர் வசாவிளான் ம. ம. வி)

வசாவிளான் சென் ஜேம்ஸ் வீதியைச் சேர்ந்தவரும், தற்பொழுது கோப்பாய் வடக்கில் வசித்தவருமான அன்ரன் ஜீவகுணரட்ணத்தின் அகால மரணச் செய்தி கேட்டு எங்கள் துயரில் பங்கு கொண்டு தங்கள் அஞ்சலிகளையும் அனுதாபங்களையும் தெரிவித்தும் உதவிகள் புரிந்த உற்றார், உறவினர் நண்பர்கள் மற்றும் மலர்வளையங்கள், மலர்மாலைகள் சாத்தியவாகளுக்கும் வசாவிளான் ம. ம. வி. பாடசாலை அபிவிருத்திச்சபை, அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், உயர்தர மாணவ மன்றம், சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ், சாரணர்களுக்கும் உரும்பராய் இந்துக்கல்லூரி, உரும்பராய் றோ. க. த பாடசாலை, குட்டியப்புலம் மகா வித்தியாலயம், மருதனார்மடம் கல்விக்கோட்டம், தொலைக்கல்வி போதனாசிரியர்கள், ஆசிரிய மாணவர்கள், தமிழீழ காவல் துறையினர், விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு, கோப்பாய் புனித மரியன்னை பங்குச்சபை, மகளிர் மன்றம், புதிய உயர் கல்லூரி சமூகத்தினருக்கும், கோப்பாய் மத்திபங்கு மக்கள், குருக்கள், கன்னியர்கள் துறவிகள் அனைவருக்கும் எங்கள் இதயம் நெகிழ்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

அன்னாரின் ஆத்ம இளைப்பாற்றிற்காக 29-12-93 புதன்கிழமை காலை 6.30 மணிக்கு கோப்பாய் மத்தி புனித சூசையப்பர் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும் இரங்கல் திருப்பலியில் பங்கு கொண்டு நித்திய இளைப்பாற்றிற்காக மன்றாடவும்.

தாய், தந்தை சகோதரர்கள்.

புனித சூசையப்பர் கோவிலடி,
கோப்பாய். (சி-8213)

## 47-ம்நாள் நினைவலைகள்



பிறப்பு
25.09.1966

## 48-ம் நாள் நினைவஞ்சலி



வீரமண்ணில் உதிப்பு;
12-07 1976

தமிழீழ மண்ணில் உதிர்வு
11-11 1993

### லெப். அன்பழகன்

(சோமகாந்தன் சிவகுமார்)

மட்டு நகரினில் மலர்ந்தவனே
அன்பிற் கினிய அன்பழகனே
தமிழீழத் தாயகத்தை மீட்கவே
தன்னை வேங்கை யாக்கியவனே
பூநகரியாம் பூமி தன்னில்
புலியெனப் பாய்ந்தவனே
வரலாறு படைத்த அன்புத் தம்பியே
வாடுகின்றோம் என்றும் உன்னை எண்ணியே

- அக்காமார்
(7062) (உமா அக்கா, ஸ்ரீ அக்கா),

## 4 ம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் தம்பு நடேஸ்

மலர்வு:
1951 - 5 - 5

தேசத்துரோகிகளால் மறைவு:
1989 - 12 - 28

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள் 27-12-1993

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 11770
வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கம்: இல்லை.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:
24- 5418, 24-5454, 26-8138, 24-6293, 26-8382, 26-0425, 26-3690, 42-1132, 42-9345, 28-2104, 26-7420, 41-6933, 28-2049, 26-4579, 26-2174, 27-1736, 26-8096, 42 6226, 42-1761, 43-1019, 41-1092, 28-8839, 26-8789, 26-3654, 41-9855, 24-2288, 28-1862, 42-6296, 41-6126, 40-7704, 26-5870, 26-4058, 42-6157.

## யாழ். வர்த்தகர் சங்கம் – ஆண்டுப் பொதுக் கூட்டம் - 1994

யாழ் வர்த்தகர் சங்கத்தின் ஆண்டுப் பொதுக் கூட்டமும், புதிய நிர்வாக உத்தியோகத்தர் தெரிவும் 1994ஆம் ஆண்டு தை மாதம் 21ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 2.30 மணிக்கு யாழ் இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறும்.

சகல துறை வர்த்தக உரிமையாளர்களும் நேரில் சமுகம் கொடுக்குமாறு பணிவன்புடன் வேண்டுகிறோம்.

மாவட்ட அரசியல்துறை முக்கிய பிரமுகர்கள் கலந்து கொள்வார்கள்.

சங்கத்தில் இதுவரை உறுப்பினர்களாக சேர்ந்து கொள்ளத் தவறியவர்கள், அல்லது மாதாந்த சந்தாப் பணம் 1993 மார்கழி வரை செலுத்தத் தவறியவர்கள் தயவு செய்து சங்கப் பணிமனையுடன் உடன் தொடர்பு கொண்டு தங்கள் உறுப்புரிமையை உறுதி செய்து கொள்ளவும்.

நன்றி

வே சிற்சபேசன் — தலைவர்
நா. த. அன்னலிங்கம் — செயலாளர்

21, மேல்மாடி, நவீனசந்தை
யாழ்ப்பாணம். (7058)

## யாழ். வர்த்தகர் சங்கம் முக்கிய கலந்துரையாடல்

யாழ். நகர் சகல துறை வர்த்தக உரிமையாளர்களுக்குமான ஒரு முக்கிய கலந்துரையாடல் 29-12-93 புதன்கிழமை (நாளை) மாலை 3.00 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறும்,

மாவட்ட அரசியல்துறை முக்கிய பிரமுகர்கள் கலந்துகொள்வார்கள்.

சகலதுறை வர்த்தக உரிமையாளர்களும் நேரில் சலந்து கொள்ள வேண்டும். தங்கள் ஸ்தாபனத்தை விட்டு வரமுடியாத வர்த்தகர்கள் ஸ்தாபனத்தை பூட்டி விட்டு வந்து பங்குபற்றல் வேண்டும் என தாழ்மையுடன் வேண்டுகிறோம்.

நன்றி.

(7068) யாழ். வர்த்தகர் சங்கம்

## உலர் உணவு விநியோகம்

இடம் பெயர்ந்தவர்களுக்கான மார்கழி மாத இரண்டு வாரங்களுக்கான உலர் உணவு விநியோகிக்க யாழ் செயலக புனர்வாழ்வுப் பகுதி சகல பல நோ. கூ. சங்கங்களிற்கு உணவுப் பொருள்களை விநியோகித்து வருகின்றது

இவ் விநியோகம் முடிவடைந்ததும் இதற்கான இடம் பெயர்ந்த குடும்பங்கள் சென்ற முறை வழங்கப்பட்ட உலர் உணவு முத்திரையின் அடிக்கட்டையைச் சமர்ப்பித்து அந்தந்த பகுதி பல நோ. கூ. சங்கங்களில் பொருள்களைப் பெற்றுக் கொள்ளலாம் என யாழ் செயலக புனர்வாழ்வுப்பகுதி தெரிவித்துள்ளது.

மார்கழி மாதத்திற்கான உலர் உணவு முத்திரைகள் வந்து சேராமையை அடுத்து இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## உலர் உணவு முத்திரை

கொழும்பில் இருந்து அடுத்து பருத்தித்துறை நோக்கி புறப்பட்டு வருகின்ற கப்பலில் இடம்பெயர்ந்தவர்களுக்கான சுமார் அறுபது மில்லியன்ரூபா பெறுமதியான உலர் உணவுமுத்திரைகள் எடுத்து வரப்படவுள்ளதாக யாழ். செயலக புனர்வாழ்வுப்பகுதி தெரிவித்தது.

இந் நிவாரண உணவு முத்திரைகள் உரிய காலத்தில் வந்துசேராமையால் அதற்கான கொடுப்பனவுகள் தாமதமாகியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இதனை அடுத்து கொடுப்பனவை வழங்க மாற்றுவழி ஒன்றை மேற்படி பகுதியினர் மேற்கொண்டுள்ளனர்.

(பா)

## இலவச மருத்துவ பரிசோதனை

யாழ் றோட்டறிக்கழகத்தினரால் ஏழாலை மத்தி சனசமூக நிலையத்தின் ஆதரவோடு ஏழாலை வாழ் மக்களுக்கு ஓர் இலவச மருத்துவப் பரிசோதனை முகாம் ஒன்றினை இன்று காலை 8.00 மணிமுதல் அங்கு நடாத்தவுளது.

பொது மருத்துவப் பரிசோதனையும், கண் பரிசோதனையும் இம் முகாமில் செய்யப்படவுள்ளன. யாழ் போதனா வைத்தியசாலை கண் வைத்தியகலாநிதி எஸ். யோகராஜா அவர்களுடன், எமது

[illegible]
கப்படும் இரங்கல் திருப்பலியில் பங்கு கொண்டு நித்திய இளைப்பாற்றிற்காக மன்றாடவும்.

தாய், தந்தை சகோதரர்கள்.

புனித சூசையப்பர் கோவிலடி,
கோப்பாய். (சி-8213)

---

## 47-ம்நாள் நினைவலைகள்



பிறப்பு
25.09.1966

வீரச்சாவு
12.11.1993

12-11-1993 அன்று எங்கள் தமிழீழ மண்ணின் பூநகரி பிராந்தியத்தின் விடுவிப்பின்போது எதிரிகளைத் துவம்சம் செய்து வெங்களமாடி வீரச்சாவடைந்த

முல்லை, மாவட்ட
சிறப்புத் தளபதி

### லெப். கேணல் அன்பு

(பொன்னம்பலம் சரவணபவான்)
(கௌதாரிமுனை, பூநகரி)

செந்தமிழ் ஈழத்தின் சீர்கொண்ட பூநகரி பதியதனில்
கடலேரி அரண் சூழும் கற்பகதரு நிறை
கௌதாரிமுனை - ஊர்தனில்
சிப்பிக்குள் முத்தெனச் சரவணபவான் நீ பிறந்தாய்
சீறிட்ட வேங்கையாக நீ வளர்ந்தாய்

எங்கள் தேசத்தைக் காக்க எழுந்தே நின்றாய்
எதிரிகளை மாய்த்தொழித்துக் கொன்றே நின்றாய்
செங்களங்கள் ஆடி நின்று சிரித்தே நின்றாய்
தேடிச் சென்று பகையொடித்து வென்றே நின்றாய்

முல்லை மணலாற்றுச் சிறப்புத் தளபதியாக - அன்பு
முத்தமிழ் காத்த எம் வீரத் தளபதி
எல்லை மிதித்தவரை எதிர்த்த தளபதி - எங்கள்
இதயத்திலே யுறையும் படைத் தளபதி
பூநகரி மண்ணிருந்த எதிரி யொடு - தலைவன்
பிரபாகரனின் தவளைத்திட்டமொடு
நேருக்கு நேர்நின்று நீசருடன் போராடி -
வெற்றியோடு
பொங்குபுகழ் நீயடைந்தாய் பெருமைகொண்டோம்

''எங்கள் குடி விளங்க வந்த இதயச்சுடரே
ஏற்றி வைத்தோம் உன்நினைவில் அணையாச்
சுடரை''

அதே தினத்தில் வீரச்சாவடைந்த சக
வீரவேங்கைகளுக்கும் இவ்அஞ்சலி சங்கமம்

28-12-93 அன்று எமதில்லத்தில் நடைபெறும் மதியபோசனத்தில் சக போராளிகள், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

- குடும்பத்தினர்

No. 6, சந்தானமாதா கோயில் வீதி,
பாண்டியன் தாழ்வு. (7061)

---



## அமரர் தம்பு நடேஸ்

மலர்வு: 1951 - 5 - 5
தேசத்துரோகிகளால் மறைவு: 1989 - 12 - 28

திதி- 1994 - 1 - 12

(கொடிகாமம் கண்ணன் கூல்பார் உரிமையாளர்)


அன்பே உருவான அப்பாவே எம் வாழ்வை வளமாக்கி விட திருவிளக்காய்த் திகழ்ந்தீர்களே தேசத்துரோகிகளால் எம்மை பிரிந்தீர்களே இனி உங்களை எங்கு தான் காண்போம் அப்பா என்று யாரை அழைப்போம் அப்பா, அப்பா எங்கள் ஆருயிர் தெய்வமே அப்பா என்றும் உங்கள் நினைவால் தவிக்கும்.

கச்சார் வெளி,
பளை (சி-8221)

அன்பு மனைவி, பிள்ளைகள்,
உறவினர்கள்.

---

## 1-ம் ஆண்டு நினைவலைகள்



பிறப்பு
25.12.1961

இறப்பு
08.01.1993

திதி:
28-12-1993

### தேசிங்கராசா யோகராசா (B. com.)

(யாழ். இந்துக் கல்லூரி ஆசிரியர்)

கண்ணின் இமைபோல் காத்து வந்தீர்
கனவுதான் வாழ்க்கை யென்று நிரூபித்தீர்
கண்ணிறைந்த கணவனாகி
கருணை கொண்ட தெய்வமானீர்
பாடுபட்டீர் நாம் பலனடைய
பகிர்ந்துண்ணும் வேளையது பாதியில்
பறித்தானோ பாதகனாம் காலனவன்
எங்கு பார்த்திடினும் உம் எழில் உருவம்
தோன்றுதப்பா யார் முகத்தை பார்த்திடினும்
உன் முகமே சிரிக்குதப்பா.

உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்

அன்பின்
தாய், சகோதரிகள்,
சகோதரர்கள்,
உறவினர்கள்.

சுதுமலை தெற்கு,
சாவல்கட்டு
(7053)

---

## முக்கிய கலந்துரையாடல்

யாழ். நகர் சகல துறை வர்த்தக உரிமையாளர்களுக்குமான ஒரு முக்கிய கலந்துரையாடல் 29-12-93 புதன்கிழமை (நாளை) மாலை 3.00 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறும்,

மாவட்ட அரசியல்துறை முக்கிய பிரமுகர்கள் கலந்துகொள்வார்கள்.

சகலதுறை வர்த்தக உரிமையாளர்களும் நேரில் கலந்து கொள்ள வேண்டும். தங்கள் ஸ்தாபனத்தை விட்டு வரமுடியாத வர்த்தகர்கள் ஸ்தாபனத்தை பூட்டி விட்டு வந்து பங்குபற்றல் வேண்டும் என தாழ்மையுடன் வேண்டுகிறோம்.

நன்றி.

(7068) யாழ். வர்த்தகர் சங்கம்

---

## 33-ம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு:
8-12-1975

வீரச்சாவு
26-11-1993

### 2-ம் லெப். செங்கையன்

(மகாதேவன் சுதாகரன்)

26-11-93 செம்மலையில் ஏற்பட்ட விமானத் தாக்குதலில் விழுப்புண் அடைந்து பின் வீரச்சாவடைந்தார்.

இன்று எமதில்லத்தில் நடைபெறும் அந்தியேட்டி நிகழ்வுக்கு சகபோராளிகள், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அப்பா, அம்மா, தம்பிமார், சித்தப்பா,
சித்திமார், தங்கைமார், அத்தைமார்,
மாமாமார், மச்சாள்மார்,
உற்றார், உறவினர்.

17, பலாலி றோட்,
யாழ்ப்பாணம். (7066)

---

## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி இராசம்மா

ஒட்டகப்புலத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்போது சிவன்வீதி உரும்பராய் கிழக்கை வசிப்பிடமாகக் கொண்ட சின்னத்தம்பி இராசம்மா (27-12-93)நேற்றுகாலமாகிவிட்டார். இவர் கனகம்மா, வைத்திலிங்கம், மேரிமலர் ஆகியோரின் தாயாரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் (28-12-93) இன்று மாலை 3 மணியளவில் சென் மைக்கல் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

சிவன் வீதி,
உரும்பராய். (7064)

தகவல்:
சி. கனகம்மா
(மகள்)

---

(பா)

## இலவச மருத்துவ பரிசோதனை

யாழ் றோட்டறிக்கழகத்தினரால் ஏழாலை மத்தி சனசமூக நிலையத்தின் ஆதரவோடு ஏழாலை வாழ் மக்களுக்கு ஓர் இலவச மருத்துவப் பரிசோதனை முகாம் ஒன்றினை இன்று காலை 8.00 மணிமுதல் அங்கு நடாத்தவுள்ளது.

பொது மருத்துவப் பரிசோதனையும், கண் பரிசோதனையும் இம் முகாமில் செய்யப்படவுள்ளன. யாழ் போதனா வைத்தியசாலை கண் வைத்தியகலாநிதி எஸ். யோகராஜா அவர்களுடன், எமது கழக உறுப்பினர்கள் வைத்திய நிபுணர் எஸ்.சிவநேசன், வைத்திய கலாநிதிகள் ஆர். ராசசூரியர், எஸ். சண்முகலிங்கம், க. விவேகானந்தன், கு. ஸ்ரீஇரத்தினகுமார் ஆகியோர் இப் பரிசோதனைகளை மேற்கொள்ளவுள்ளனர்.

## சமுகம் தரவும்

யாழ்.வடக்குவலய ஆசிரிய ஆலோசகர்களை நாளை யாழ். கல்வித் திணைக்களத்திற்கு வருகை தருமாறு கல்விப்பணிப்பாளர் திரு. க. கந்தசாமி கேட்டுள்ளார்.

அன்றையதினம் உடற்கல்வி ஆசிரிய ஆலோசகர்களை காலை 10.00 மணிக்கும், விஞ்ஞானக் கல்வி ஆசிரிய ஆலோசகர்களை பி.ப. 2.00 மணிக்கும் தவறாது யாழ் கல்வித் திணைக்களத்திற்கு வருமாறு அவர் கேட்டுள்ளார்.

---


## சிற்றிசன் கல்வி நிறுவனம்

சந்திர விநாயகர் வீதி,
கல்வியங்காடு,
யாழ்ப்பாணம்.

புலமைப் பரிசில் பரீட்சைக்கான புதிய பிரிவு ஆரம்பம்

5 - 1 - 94

பதிவுகளை முன்கூட்டியே பதிவுசெய்யுங்கள்

ஃ ஏனைய வகுப்புகள் ஜனவரி 5-ம் திகதிக்கு பின் ஆரம்பமாகின்றன.
(சி-8226)



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1993ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 28ஆம்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.